பாரத மாதா

தமிழ் வாசகம்

[இரண்டாம் புத்தகம்]



ப்ளிஷிங் ஹவுஸ் லிமிடெட்,
சென்னை 1

பாரத மாதா

தமிழ் வாசகம்

இரண்டாம் புத்தகம்

C. இரகுநாதன். B.A.,L.T., T.D. (Lond)., M.R.S.T.
Retired Divisional Inspector of Schools.

இந்தியன் பப்ளிஷிங் ஹவுஸ் லிமிடெட்
14, சுங்குராம செட்டித் தெரு, சென்னை - 1.

 1958 [விலை ந. பை. 38

Seventeenth Edition—1958

Approved by the Text-Book Committee
Vide Page 24 of the Fort St. George Gazette,
Part I dated 22—5—51

பாலா பிரிண்டர்ஸ், மதராஸ்-6.

நூன்முகம்


ஆரம்பப் பள்ளிக்கூடப் பாட திட்டத்தில் பாஷை வெகு முக்கியமானதென்பது அனைவரும் அறிந்தது. மனத்தில் உள்ள விஷயங்களைத் தெரிவிப்பதற்கு ஆதாரமாயிருப்பவை சொற்களே. விஷயங்களை மனத்தினுள் நினைப்பதற்கும் சொற்களே ஆதாரம். குழந்தைகளைப் பாஷையில் தேர்ச்சி பெறச்செய்வதற்கு உபாத்தியாயர்கள் கவனிக்க வேண்டிய முக்கியமான விஷயம் என்னவெனில், பாஷை குழந்தைகளுக்கு உற்சாக மூட்டக்கூடியதாயும், அது அவர்கள் கற்கக்கூடிய சக்தியின் அளவுக்குட்பட்டதாயும் இருத்தல் வேண்டுமென்பதே. முதல் முதலாகப் பாஷை பேச்சு மூலமாய் அதிகமாக உபயோகப்படுகிறது. எழுதுவது, அதற்கு அடுத்தபடி என்பதும் உண்மை. ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் ஐந்தாவது வகுப்பு வரை படித்தவரின் சக்தி பெரும்பான்மையாகப் பேசுவதற்கும், சிறுபான்மை எழுதுவதற்கும் உபயோகப் படுகிறது.

ஆகையினால், சிறு பிராயத்தில் குழந்தைகள் பிறர் நன்றாகப் பேசுவதைக் கேட்பதுடன், தாமே பேசுவதற்கும் பயிலவேண்டும். பேசுவதற்கு ஏற்படும் பழக்கமெல்லாம் பெரும்பாலும் வாசகத்தை படிப்பதனாலேயே உண்டாகிறதென்னலாம். அவ்வாசகத்தை உரக்கப் படிப்ப தென்பதில் கண்கள் தொடர்ந்து பார்ப்பது, சரியாக உச்சரிப்பது, புது வார்த்தைகளைக் கவனிப்பது, அவற்றின் அர்த்தத்தைக் கிரகிப்பது, ஒரு திட்டமான வேகத்தில் படிப்பது ஆகிய இவையாவும் அடங்கியுள்ளன. அதைவிட முக்கியமானதும் சிரமமானதுமான மௌனப் படிப்பு இதுகாறும் செவ்வனே கவனிக்கப்படவில்லை எனத் தோன்றுகிறது. பெரியவர்களானபொழுது இவ்வகைப் படிப்பே பெரும்பாலும் உபயோகப் படுகிறது; உரக்க வாசித்தலில் (செய்யுள் நீங்கலாக) உற்சாகம் சிறிதே ஏற்படுகின்றது. துரிதமாக விஷயங்களைக் கிரகிக்கவும், உற்சாகமடையவும் மிகவும் ஏற்றது மௌனப் படிப்பே. சாதாரணமாக அநேக பாடப் புத்தகங்களில் உள்ள வார்த்தைகளைக் கவனிக்குமிடத்தில் அவற்றில் பல, சில எழுத்துக்களைக் கற்பிப்பதற்கே ஏற்பட்டுள்ளன.


வார்த்தைகள், குழந்தைகளுக்கு அர்த்தமாவதில்லை; அவர்களுக்கு உற்சாகம் கொடுப்பதுமில்லை. தவிர, முதற் புத்தகத்தில் வந்த வார்த்தைகளை மறுமுறை அவர்கள் பார்ப்பதற்கோ கேட்பதற்கோ இடம் ஏற்படுவதில்லை; மேல் வகுப்புகளில் மௌனப் படிப்பிற்குப் பயிற்சி அளிப்பதுமில்லை. அப்பயிற்சி ஏற்பட்டால் குழந்தைகளால் தங்கள் அபிப்பிராயத்தைச் செவ்வனே வெளியிடுவதற்கு முடியும். தவிரவும் வாசகங்களிலுள்ள பாடங்கள் பெரும்பாலும் பொது அறிவு சம்பந்தமான பாடங்களாக இருத்தலால் பாலர்கள் விஷயங்களைக் கவனிக்கிறார்களே யன்றி, பாஷா அபிவிருத்தியைக் கவனிப்பதில்லை.

பாரத மாதா வாசகங்களில் சாதாரணமாக அவசியமானவையும் எல்லோரும் உபயோகிக்கின்றவையுமான வார்த்தைகளே கணக்கிட்டு உபயோகிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, தொடர்ந்து, இவ்வாசகங்களை வாசிக்கும் மாணவர்களுக்கு, இவ்வாசகங்கள் தினசரிப் பத்திரிகைகளை வாசிக்கவும் கிரகிக்கவும் போதுமான சக்தியை அளிக்குமென எதிர்பார்க்கப் படுகிறது. பாடங்களில் வரும் புதுப் பதங்களை கவனித்தும், இறுதியில் காணப்படும் பயிற்சிகளையும் கேள்விகளுக்கு விடைகளையும் முறையாகச் செய்தும் வந்தால், பாலர்கள் பிறர் முயற்சியின்றி இயல்பாகவே பாஷையைக் கற்கவும், அதில் தேர்ச்சிபெறவும் கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது. இவற்றில் உபாத்தியாயர்கள் வழிகாட்டிகளாக இருத்தல் வேண்டுமென்பது ஆசிரியரின் வேண்டுகோள். சிறு வகுப்புகளுக்கான புத்தகங்களில் நீதிச் செய்யுட்களைச் சேர்க்கவில்லை. அச்சிறுவயதில் அரியபெரிய விஷயங்களைப் பாலர்கள் அர்த்தமின்றிக் கற்பது அவ்வளவு உசிதமன்று என்றெண்ணி, அவைகள் மேல் வகுப்பு வாசகங்களில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதில் சிறு இலக்கண விஷயங்களை, உதாரணங்கள் மூலமாகக் கற்பதற்கான பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. இவைகளின் மூலம் குழந்தைகள் தாய்ப் பாஷையைச் செவ்வனே கற்று மேன்மேலும் அபிவிருத்தியை அடைவார்களாக.


ஆசிரியர்.



குறிப்பு:—பிள்ளைகள் படங்களின் பெயர்களைக் கற்பலகையில் எழுதவேண்டும்.



குறிப்பு :—பிள்ளைகள் படங்களின் பெயர்களைக் கற்பல்கையில் எழுதவேண்டும்.



குறிப்பு :—பிள்ளைகள் படங்களின் பெயர்களைக் கற்பலகையில் எழுதவேண்டும்.



பாடம் 1.

உன் பெயர் என்ன ?

என் பெயர்...............

உன் தகப்பனுர் பெயர் என்ன ?

என் தகப்பனுர் பெயர்........

நீ எந்த வகுப்பில் படிக்கின்ருய் ?

நான் இரண்டாவது வகுப்பில்
படிக்கின்றேன்.

பாடம் 2.




பன்னீர்ச் செம்பு




சந்தனப் பேலா



தென்னந் தோப்பு



நெருப்புப் பெட்டி




தாழங் குடை




பூச்செடி
பூத் தொட்டி

1. தந்தச் சீப்பு
2. கிளிக் கூண்டு
3. குங்குமச் செம்பு
4. துணிக் குடை
5. தெப்பக் குளம்
6. சரிகைச் சேலை
7. வாழைப் பழம்
8. பூந் தோட்டம்
9. கோழிக் குஞ்சு
10. பூனைக் குட்டி
11. கீரிப் பிள்ளை
12. சிற் றெறும்பு
13. புளியம் பழம்
14. ரோஜாச் செடி
15. பழக் கடை
16. கீரைப் பாத்தி

பாடம் 3.



இது ஒரு பென்சில்.



இவை புத்தகங்கள்.




இவன் படிக்கிறான்.



இவள் படிக்கிறாள்.




இவர்கள்
விளையாடுகிறார்கள்.




இங்கே ஓர் ஊசி
இருக்கிறது.

அது ஒரு பேனா.



அவை சிலேட்டுகள்.



அவன் எழுதுகிறான்.




அவள் தைக்கிறாள்.



அவர்கள்
படிக்கிறார்கள்.



அங்கே ஐந்து ஊசிகள்
இருக்கின்றன.



பாடம் 4.

ராமனைக் கூப்பிடு.

புத்தகத்தை எடு.

பாடத்தைப் படி.

படத்தைப் பார்.

பல்லைத் துலக்கு.

கத்தியைக் கொண்டு வா.

பென்சிலைச் சீவு.

கயிற்றை நறுக்கு.

துணியை உலர்த்து.

மரத்தை வெட்டு.

ராமன்	- ராமனை	கத்தி	- கத்தியை
புத்தகம்	- புத்தகத்தை	பென்சில்	- பென்சிலை
பாடம்	- பாடத்தை	கயிறு	- கயிற்றை
பல்	- பல்லை	மரம்	- மரத்தை

பாடம் 5.

ராமனுக்கு மிட்டாய் கொடு.

செடிக்குத் தண்ணீர் ஊற்று.

குதிரைக்கு புல் போடு.

நாய்க்குச் சோறு போடு.

பெட்டிக்கு வர்ணம் பூசு.

வேஷ்டிக்குச் சோப்புப் போடு.

மாட்டுக்கு நான்கு கால்கள்.

குழந்தைக்குச் சிரிப்புக் காட்டு.

ராமன்	- ராமனுக்கு	பெட்டி	- பெட்டிக்கு
செடி	- செடிக்கு	சட்டை	- சட்டைக்கு
குதிரை	- குதிரைக்கு	மாடு	- மாட்டுக்கு
நாய்	- நாய்க்கு	குழந்தை	- குழந்தைக்கு

பாடம் 6



விறகு வெட்டி கோடாரியால்
விறகு பிளக்கிறார்.



வாள்காரர் ரம்பத்தால்
பலகையை அறுக்கிறார்.

1. வண்டிக்காரர் சாட்டையால் குதிரையை அடிக்கிறார்.
2. கமலம் ஊசியால் சொக்காய் தைக்கிறாள்.
3. நாம் பென்சிலால் எழுதுகிறோம்.
4. நாம் கத்தியால் நறுக்குகிறோம்.
5. நாம் கண்களால் பார்க்கிறோம்.
6. நாம் காதுகளால் கேட்கிறோம்.

பென்சில்	– பென்சிலால்	கத்தி	– கத்தியால்
பம்பரம்	– ரம்பத்தால்	ஊசி	– ஊசியால்

பாடம் 7

குடத்தில் தண்ணீர் இருக்கிறது.

சீசாவில் பன்னீர் இருக்கிறது.

மைக்கூட்டில் மை இருக்கிறது.

டம்ளரில் பால் இருக்கிறது.

மரத்தில் தேன் கூடு இருக்கிறது.

பெட்டியில் புத்தகங்கள் இருக்கின்றன.

கூடையில் பழங்கள் இருக்கின்றன.

தொட்டிலில் குழந்தை தூங்குகிறது.

மடியில் அவள் வைத்திருக்கிருள்.

குளத்தில் தாமரை இருக்கிறது.

பானையில் அரிசி இருக்கிறது.

குடம் – குடத்தில் மைக்கூடு – மைகூட்டில்
சீசா – சீசாவில் தொட்டில் – தொட்டிலில்

இராமனுடைய வீடு பெரியது.

வீட்டில் பல அறைகள் உண்டு.

அறையின் கதவை மூடு.

புத்தகத்தை மேஜைமேல் வை.

துணியைக் கொடியில் உலர்த்து.

தோட்டத்தில் கிணறு இருக்கிறது.

பாலுக்குச் சர்க்கரை போதாது.

தந்தை ஊருக்குப் போகிருர்.

நாம் கண்ணுல் பார்க்கிரும்.

மாலையில் விளக்கு ஏற்று.

பெற்ருேர் சொல்லைத் தட்டாதே.

கடவுளை என்றும் மறவாதே.

இராமன் — இராமனுடைய	பால்—பாலுக்கு
வீடு — வீட்டில்	மாலை—மாலையில்
புத்தகம் — புத்தகத்தை	கண்—கண்ணுல்

அப்பியாசம்

எழுதியுள்ளபடி செய்


நில்	உட்காரு
வாயைத்திற	வாயை மூடு
வலது கையைக் காட்டு	இடது கையைக் காட்டு
புத்தகத்தை எடு	புத்தகத்தை மேஜை மேல் வை
கதவை மூடு	கதவைத் திற
இடது கையை மேலே உயர்த்து	வலது கையைக் கீழே தாழ்த்து

வலது கையை முன்புறம் நீட்டு.

இரண்டு கைகளையும் சேர்த்துத் தட்டு.

பின்புறம் தலைசாய். தலை நிமிர்.

அப்பியாசம் 2



வீட்டில்	புற்றில்	மரத்தில்
காட்டில்	வளையில்	தண்ணீரில்

மீன் தண்ணீரில் வசிக்கும்.

பாம்பு.........................வசிக்கும்.

எலி.........................

கிளி.........................

புலி.........................

ஆடு.........................

அப்பியாசம் 3

1. ....படிக்கிருன்.

2. மரத்தை.................வெட்டு.

3. கயிற்றை.................நறுக்கு.

4. குதிரைக்கு...................கால்கள்.

5. பெட்டியில் புத்தகம்...................

6. பெட்டியில் புத்தகங்கள்................

7. கிளிக்கு...................கால்கள்

8. பசு......................தின்னும்.


9. ....மை இருக்கிறது.

10. ....டு; ....படி.

11. ....சோப்புப் போடு.


12. தேன் கூடு.................இருக்கிறது.

பாடம் 8




பால்காரர்

பால் கறக்கிருர்.



தபால்காரர்

தபால் கொடுக்கிருர்.



தையற்காரர்


துணிகளைத்

தைக்கிருர்.

வண்டிக்காரர்

வண்டியை

ஓட்டுகிறார்.





தோட்டக்காரர்

செடிகளுக்குத்

தண்ணீர்

ஊற்றுகிறார்.

வேலைக்காரர் வேலை செய்கிறார்.

கூலிக்காரர் வேலை செய்கிறார்.

போலீஸ்காரர் திருடனைப் பிடிக்கிறார்.

பாடம் 9




வயலை உழுகிறார்கள்.



வயலில் நாற்று
நடுகிறார்கள்.




கதிர் அறுக்கிறார்கள்.



தாளைக் கட்டி
அடிக்கிறார்கள்.






நெல்லைச் சாக்குகளில்
போட்டுக் கட்டுகிறார்கள்.




நெல் மூட்டைகளை
வண்டியில்
கொண்டு போகிறார்கள்.







குறிப்பு:—பிள்ளைகள் படங்களைப்பார்த்துப் பின்வரும் கேள்விகளுக்குப் பதில்களைக் கற்பலகையில் எழுதவேண்டும்.

அப்பியாசம் 4

என்ன ? எங்கே ? எப்படி ?

1. பெண்கள் என்ன செய்கிருர்கள் ?
பெண்கள்————

2. காகம் எங்கே இருக்கிறது ?
காகம்————இருக்கிறது.

3. மனிதர் எங்கே படுத்திருக்கிருர் ?
மனிதர்————படுத்திருக்கிருர்.

4. பையன் எங்கே போகிருன் ?
பையன்————போகிருன்.

5. வண்ணுர் என்ன செய்கிருர் ?
வண்ணுர்————

6. கூலிக்காரர் என்ன செய்கிருர் ?
கூலிக்காரர்————

7. கொத்தனர் என்ன செய்கிருர் ?
கொத்தனர்————


8. குழந்தை எங்கே உட்கார்ந்து இருக்கிறது ?
குழந்தை————

9. மாடு என்ன செய்கிறது.
மாடு————

10. ரயில் எப்படி ஓடுகிறது ?
ரயில்————

பாடம் 10.

இந்தப் பையனைப் பார்.



இவன் என்ன
செய்கிருன்?

இவன் காற்ருடி
விடுகிருன்.


காற்று வீசுகிறது.

காற்ருடி பறக்கிறது.



பையன் குடை பிடித்திருக்கிருன்.
மழை "சோ" என்று பெய்கிறது.
காற்று 'விர்' என்று வீசுகிறது.
'இடி டம, டம' என்று இடிக்கிறது.
மின்னல் 'பளிச், பளிச்' என்று
மின்னுகிறது.

பாடம் 11.



ஆகாயத்தைப் பார்.

ஆகாயம் என்ன நிறம்?

ஆகாயம் நீல நிறம்.

ஆகாயத்தில் நீ என்ன பார்க்கிருய்?

நான் சூரியனைப் பார்க்கிறேன்.

மேகங்களைப் பார்க்கிறேன்.

மேகங்கள் நகருகின்றன.

காற்று மேகங்களைத் தள்ளுகிறது.

வெயில் காய்கிறது.

வெயில் உஷ்ணமாய் இருக்கிறது.

சூரியனை உற்றுப் பார். பார்க்க முடிகிறதா?

இல்லை; கண் கூசுகிறது.

சூரியன் பகலில் பிரகாசிக்கிறது.

இரவில் ஆகாயத்தில் நக்ஷத்திரங்கள் பல பளிச் பளிச் என்று மின்னுகின்றன.

சில தினங்களில் சந்திரன் தோன்றும்.

சந்திரன் நிலா வீசும்.

நிலா குளிர்ச்சியாய் இருக்கும்.


நக்ஷத்திரங்களை எண்ணிப்பார்.

எத்தனை நக்ஷத்திரங்கள் இருக்கின்றன?

உன்னால் எண்ண முடியுமா?

நிலா என்றால் ஒளி.

அப்பியாசம் 5



மேலேயுள்ள ஒவ்வொரு படத்தைப்பற்றியும் ஒவ்வொரு வாக்கியம் எழுது.

பாடம் 12

குடி	குடித்தேன்

டம்ளரில் தண்ணீர் இருக்கிறது.
முருகா, நீ தண்ணீரைக் குடி.
முருகா, நீ என்ன செய்தாய்?
நான் தண்ணீரைக் குடித்தேன்.
தண்ணீர் எங்கே இருந்தது?
தண்ணீர் டம்ளரில் இருந்தது.


மூடு திற	மூடினேன் திறந்தேன்	மூடினான் திறந்தான்

கந்தா, கதவை மூடு.
கதவைத் திற.

கந்தா, நீ என்ன செய்தாய்?
நான் கதவை மூடினேன்;
கதவைத் திறந்தேன்.

கோபாலா, கந்தன் என்ன செய்தான்?
கந்தன் கதவை மூடினான்;
கதவைத் திறந்தான்.


பாடம் 13



கிண்ணத்தில் பால் இருக்கிறது.

ஒரு பூனை வருகிறது.





பூனை

பாலைக் குடிக்கிறது; ஓடிப்போகிறது.

பால் எங்கே இருந்தது ?

பூனை என்ன செய்தது ?

கிண்ணத்தில் பால் இருந்தது.

பூனை அங்கே வந்தது ;

பாலைக் குடித்தது ;

ஓடிப்போயிற்று.

இருக்கிறது	இருந்தது
வருகிறது	வந்தது
குடிக்கிறது	குடித்தது
ஓடிப்போகிறது	ஓடிப்போயிற்று

பாடம் 14

காகமும் முறுக்கும்



ஒரு பையன் வீட்டின் வாயிலில் நிற்கிறான். அவன் கையில் முறுக்கு வைத்திருக்கிறான். ஒரு காகம் அதைப்பார்க்கிறது.



காகம் முறுக்கைக் கௌவிக்கொண்டு பறக்கிறது.



காகம் மரத்தில் இருக்கிறது. அதன் வாயில் முறுக்கு இருக்கிறது. மரத்தின் அடியில் ஒரு நாய் இருக்கிறது.



நாய் 'ளொள்' என்று குரைக்கிறது. காகம் 'கா கா' என்று கத்துகிறது. முறுக்கு கீழே விழுகிறது.

நாய் முறுக்கைக் கௌவிக் கொண்டு ஓடுகிறது.

1. பையன் எங்கே நின்ருன் ?
2. அவன் கையில் என்ன வைத்திருக்கிருன் ?
3. காகம் என்ன செய்கிறது ?
4. காகம் எங்கே உட்கார்ந்தது ?
5. நாய் எங்கே இருந்தது ?
6. நாய்க்கு முறுக்கு எப்படிக் கிடைத்தது ?

ஒரு பையன் வீட்டின் வாயிலில் நின்ருன். அவன் கையில் ஒரு முறுக்கு வைத்திருந்தான். ஒரு காகம் முறுக்கைப் பிடுங்கிக் கொண்டு பறந்தது.

காகம் ஒரு மரத்தில் உட்கார்ந்தது. மரத்தின் அடியில் ஒரு நாய் இருந்தது. நாய் 'ளொள் ளொள்' என்று குரைத்தது. காகம் 'கா கா' என்று கத்திற்று. முறுக்கு கீழே விழுந்தது. நாய் முறுக்கைத் தின்றது.

பாடம் 15

கிழமைகள்

ஞாயிற்றுக்கிழமை
திங்கட்கிழமை
செவ்வாய்க்கிழமை
புதன்கிழமை
வியாழக்கிழமை
வெள்ளிக்கிழமை
சனிக்கிழமை

மாமா: மணி இன்று என்ன கிழமை ?

மணி : இன்று.........கிழமை.

மாமா: நேற்று என்ன கிழமை ?

மணி : நேற்று......... கிழமை.

மாமா: நாளை என்ன கிழமை ?

மணி : நாளை.........கிழமை.

மாமா: மணி இன்று நீ பள்ளிக்கூடம் போவாயா ?

மணி : ஆம், மாமா. இன்று நான் பள்ளிக் கூடம் போவேன்.

மாமா: பள்ளிக்கூடத்தில் நீ என்ன செய் வாய் ?

மணி : நான் பாடம் படிப்பேன்; எழுதுவேன்.

மாமா: நீ எப்பொழுது விளையாடுவாய் ?

மணி : நான் மாலையில் விளையாடுவேன்.

மாமா: எவ்வளவு நேரம் விளையாடுவாய் ?

மணி : சூரியன் மறையும் வரையில் விளையாடு வேன்.

மாமா: பிறகு என்ன செய்வாய் ?

மணி : பிறகு கை, கால்களைச் சுத்தம் செய் வேன் ; சாப்பிடுவேன் ; விளக்கின் சமீபத்தில் உட்கார்ந்து பாடம் படிப் பேன் ; பிறகு தூங்குவேன்.

மாமா: எவ்வளவு நேரம் தூங்குவாய் ?

மணி : சூரியன் உதிக்கும் வரையில் தூங்கு வேன்.

அப்பியாசம் 6

இந்தப் பதங்களை உபாத்தியாயர் தனித்துண்டுக் காகிதங்களில் எழுதி, பிள்ளைகளை அவைகளுக்கு நேராகக் கோடிட்ட இடங்களில் பொருத்தமான வார்த்தைகளை எழுதச் செய்க:

படிக்கிறேன்	படிக்கிருன்
படிக்கிருய்	படிக்கிறீர்கள்
படிக்கிருேம்	படிக்கிருர்கள்
படிக்கிருள்	

1. நான் படிக்கிறேன்.
2. நாங்கள்.................................
3. நீ.................................
4. நீங்கள்.................................
5. அவன்.................................
6. அவள்.................................
7. அவர்கள்.................................

அப்பியாசம் 7

ஓடினர்கள்	ஓடினுய்	ஓடினன்
ஓடினள்	ஓடினேன்	ஓடின
ஓடிற்று	ஓடினேம்	ஓடினீர்கள்

1. நான் ஓடினேன்.
2. நாங்கள்.................................
3. நீ.................................
4. நீங்கள்.................................
5. அவன்.................................
6. அவள்.................................
7. அவர்கள்.................................
8. குதிரை.................................
9. குதிரைகள்.................................

அப்பியாசம் 8

வருவேன்	வருவாள்	வாங்கினேன்
வருவாய்	வருவோம்	படிக்கிறார்கள்
வருவார்கள்	போவேன்	மூடினான்
வருவான்	எழுதுகிறோம்	குடித்தது
வருவீர்கள்	தூங்கினான்	மேய்ந்தன


1. நான் நாளைக்குப் பள்ளிக்கூடம் வருவேன்.
2. நாங்கள் ———
3. நீ———
4. நீங்கள்———
5. அவன்———
6. அவள்———
7. அவர்கள்———
8. நேற்று நான் புத்தகம்———
9. நாளை நான் கோவிலுக்குப்———
10. அவர்கள் பாடம்———
11. மாடுகள் புல்லை———
12. நாங்கள் பென்சிலால்———
13. அவன் கட்டிலில்———
14. பூனை பாலைக்———
15. அவன் பெட்டியை———

குறிப்பு:—பிள்ளைகளைக் கோடிட்ட இடங்களில் பொருத்தமான வார்த்தைகளை எழுதச் செய்க.


பாடம் 16

வண்டிகள்


இது மாட்டு வண்டி. இரண்டு காளை மாடுகள் வண்டியில் பூட்டப்பட்டிருக்கின்றன. காளைகள் வண்டியை இழுக்கும். வண்டிக்கு இரண்டு சக்கரங்கள் இருக்கின்றன. வண்டிச் சக்கரங்கள் வட்டமாய் இருப்பதைக் கவனி.




இது குதிரை வண்டி. இதில் ஒரு குதிரை பூட்டப்பட்டிருக்கிறது. மாட்டு வண்டி மெதுவாகப் போகும். குதிரை வண்டி வேகமாய் ஓடும். வண்டிக்காரன் லகானைப் பிடித்து இழுத்தால் குதிரை நிற்கும்.



இது ரயில் வண்டி. வண்டிகளை என்ஜின் இழுக்கிறது. இதில் பல வண்டிகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ரயில் தண்டவாளங்களின் மீது ஓடும். ரயில் மிகவும் வேகமாய் ஓடும்.



இது ஒரு மோட்டார். இதற்கு நான்கு



சக்கரங்கள் இருக்கின்றன. சக்கரங்களைச் சுற்றிலும் ரப்பர் கட்டுகள் போடப்பட்டிருக்கின்றன. மோட்டாரும் ரயிலைப் போல மிக வேகமாக ஓடும்.

கேள்விகள்

1. உன் வீட்டில் ஏதாவது ஒரு வண்டி இருக்கிறதா ?
2. என்ன வண்டி இருக்கிறது ?.
3. நீ என்னென்ன வண்டிகளில் பிரயாணம் செய்திருக்கிருய் ?
4. ரயில் வண்டியை எது இழுக்கிறது ?
5. ரயில் வண்டி எதன்மீது ஓடுகிறது ?

அப்பியாசம் 9

கோடு போட்டுள்ள இடங்களில் சரியான வார்த்தைகளை அமைத்து படி.

மெதுவாக × வேகமாக

1. குதிரை வண்டி———போகும்.
2. மாட்டு வண்டி———போகும்.
3. குதிரை வண்டி மாட்டு வண்டியைப் பார்க்கிலும்———போகும்.

சுவர்	மரங்கள்	வரப்பு

1. தோட்டத்தைச் சுற்றிலும்————இருக்கின்றன.
2. வயலைச் சுற்றிலும்——— இருக்கிறது.
3. கிணற்றைச் சுற்றிலும்————இருக்கிறது.

பாடம் 17

ம ர ங் க ள்



இது ஒரு மாமரம். இதில் பல கிளைகள் இருக்கின்றன. இந்த மரத்தில் ஏராளமான இலைகள் இருக்கின்றன. விசேஷ தினங்களில் மா இலைகளைத் தோரணமாகக் கட்டுவார்கள். மாமரம் கொத்துக் கொத்தாகப் பூக்கும். பூக்கள் வெண்மையாய் இருக்கும். மாங்காய் புளிக்கும். மாம்பழம் இனிக்கும். அடிமரம் பருத்து இருக்கிறது. கிளைகள் சிறுத்து இருக்கின்றன. வேர்கள் பூமிக்குள் பரவி வளர்கின்றன.



இது ஒரு தென்னை மரம். இது அதிக உயரம் வளரும். மரத்தின் உச்சியில் பல மட்டைகள் இருக்கின்றன. அவைகளின் அடியில்காய்கள் குலை குலையாகத் தொங்குகின்றன. தென்னை மரத்துக்குக் கிளைகள் இல்லை. தேங்காய்ப் பருப்புத் தித்திப்பாக இருக்கும்.

இது ஒரு வாழை மரம்.



இதன் பக்கத்தில் ஒரு வாழைக் கன்று முளைத்திருக்கின்றது. வாழை இலைகள் அகலமாய் இருக்கின்றன. வாழை இலையில் சாப்பிடலாம். வாழைக் குலையில் காய்கள் சீப்புச் சீப்பாய் இருக்கின்றன. குலையின் நுனியில் வாழைப் பூ இருக்கிறது. வாழைப் பூவும் காயும் கறி சமைக்க உதவும்.

கேள்விகள்

1. மரத்தின் பாகங்கள் எவை?
2. கிளைகளுள்ள இரண்டு மரங்கள் எவை?

3. கிளைகள் இல்லாத இரண்டு மரங்கள் எவை?
4. மாம்பூக்கள் என்ன நிறம்?
5. வாழைப்பழம் என்ன ருசி?

அப்பியாசம் 10

கோடிட்ட இடத்தில் சரியான வார்த்தைகளை எழுது.

1. தென்னை மரத்துக்குக் கிளைகள்————
2. குதிரைக்குக் கொம்புகள்————
3. வாழைக்காய்——உதவும்.
4. வேர்கள்————வளர்கின்றன.

கீழே உள்ள வார்த்தைகளை உபயோகித்து வாக்கியங்கள் எழுதுக :—

1. கொத்துக் கொத்தாய்
2. குலை குலையாய்
3. சீப்புச் சீப்பாய்
4. நுனியில்
5. அடியில்
6. ஏராளமான

பாடம் 18


மிருகங்கள்



நாய் வீட்டைக் காக்கும். இதற்குச் சந்தோஷம் வந்தால் வாலை ஆட்டும்; கோபம் வந்தால் உறுமும். நாய் சோறு, இறைச்சி, ரொட்டி இவைகளைத்தின்னும்.



குதிரை மிகவும் கம்பீர மான பிராணி. குதிரை, வண்டி இழுக்க உதவும். குதிரை, புல் தின்னும். கொள்ளே வேக வைத்து அதற்குத் தீனியாக வைப்பதும் உண்டு குதிரைக் குக் கொம்புகள் இல்லே. அதன் வாலினுல் தன் மேல் உட்காரும் ஈ கொசுக்களே ஓட்டிக் கொள்ளும்.



மிருகங்களில் எல்லாம் பெரியது யானே. இது கறுப்பு நிறமுள்ளது. யானேக்குத் துதிக்கை உண்டு. அது துதிக்கையால், ஆகாரத் தை எடுத்து உண்ணும்; தண் ணீரை உறிஞ்சும்; பெரிய பெரிய பொருள்களேயும் தூக் கும். யானே, இலே தழைகளேத் தின்னும். கரும்பைத் தின்ன யானேக்குப் பிரியம் அதிகம்.

" யானே வரும் பின்னே, மணி ஒசை வரும் முன்னே "

கேள்விகள்

1. நாயின் ஆகாரம் என்ன ?
2. நாயின் வாலுக்கும் குதிரையின் வாலுக்கும் வித்தியாசம் என்ன ?
3. குதிரைக்கு அதன் வாலால் என்ன உப யோகம் ?
4. யானேயின் நிறம் என்ன ?

அப்பியாசம் 11

கோடிட்ட இடங்களில் சரியான வார்த்தைகளை வைத்து எழுதுக :—

1. ————————வீட்டைக் காக்கும். (குதிரை, நாய், யானை.)
2. ————————மிகவும் கம்பீரமான மிருகம். (ஆடு, மாடு, குதிரை, கழுதை)
3. ————————புல் தின்னும். (நாய், பன்றி, பசு)

கீழ்கண்ட வார்த்தைகளை உபயோகித்து வாக்கியங்களை எழுது :—

1. சந்தோஷம்
2. கோபம்
3. அடர்ந்து
4. துதிக்கை
5. ஓசை

பாடம் 19

பறவைகள்

கிளி மிகவும் அழகான பறவை. இதன் நிறம் பச்சை. இதன் அலகின் நிறம் சிவப்பு. கிளி மரப் பொந்துக்களில் வசிக்கும். இது காய்களையும் கனிகளையும் தின்னும். சிலர் கிளிகளைக் கூட்டில் வைத்து வளர்ப்பதும் உண்டு.



கிளியை வளர்ப்பவர்கள் அதற்குப் பாலையும் சோற்றையும் உணவாகக் கொடுப்பார்கள்.

காகம் கறுப்பு நிறம் உள்ளது. அது 'கா, கா' என்று கத்தும். அது சோறு, மாமிசம்,



புழு, பூச்சிகள், செத்த எலிகள், பிராணிகள் ஆகிய இவைகளைத் தின்னும். குழந்தைகள் கையில் தின் பண்டம் இருந்தால் காகம் அவைகளைக் கௌவிக் கொண்டு பறக்கும்.

கோழியைக் குடியானவர்கள் வீட்டில்



வளர்ப்பார்கள். பெண் கோழிக்குப் பெட்டைக் கோழி என்றும் ஆண் கோழிக்குச் சேவல் என்றும் பெயர். சேவலுக்குத் தலையில் கொண்டை உண்டு. அதன் கொண்டை சிவப்புநிறமாய் இருக்கும். கோழி தானியம், புழு, பூச்சி முதலியவைகளைத் தின்னும். சேவல் அதிகாலையில் 'கொக்கரக்கோ' என்று கூவும்.

கேள்விகள்

1. நீ உன் வீட்டில் கிளியை வளர்க்கிறாயா ?
2. கிளியை வளர்ப்பவர்கள் அதற்கு என்ன ஆகாரம் கொடுப்பார்கள் ?
3. காகம் எப்படிக் கத்துகிறது ?
4. கோழி எப்படிக் கூவுகிறது ?

அப்பியாசம் 12

கீழே இரண்டு வரிசையாக உள்ள வார்த்தைகளைச் சரியான அர்த்தம் விளங்கும்படி ஜோடி சேர்த்து எழுது:—

கிளியின் அலகு	காய் கனிகளைத் தின்னும்
காகம்	கறுப்பு நிறம்
கிளி	சிவப்பு நிறம்
கோழி	தானியங்கள், புழு பூச்சிகளைத் தின்னும்

அப்பியாசம் 13

வெள்ளை	சிவப்பு	மஞ்சள்
கறுப்பு	பச்சை	நீலம்

பாலின் நிறம் என்ன ?

பாலின் நிறம் வெள்ளை.

———————என்ன நிறம் ?

வெற்றிலை	இரத்தம்
சுண்ணும்பு	சூரியகாந்திப் பூ
காகம்	ஆகாயம்
கிளி	நிலக்கரி
கொக்கு	தங்கம்
ரோஜாப் பூ	வெள்ளி
முல்லைப் பூ	இரும்பு
தாழம் பூ	பஞ்சு
வாழைப்பழம்	செம்மண்
திராக்ஷைப்பழம்	கோலப்பொடி
யானை	

வெள்ளை நிறமுள்ள பூக்களைச் சொல்

அப்பியாசம் 14

தித்திப்பு	கசப்பு	காரம்
புளிப்பு	துவர்ப்பு	கரிப்பு

பாலின் ருசி என்ன ?
பால் தித்திப்பு.


———————ருசி என்ன ?

எலுமிச்சம் பழத்தின்	பாகற்காயின்
மாம்பழத்தின்	கற்கண்டின்
மாங்காயின்	சர்க்கரையின்
இளநீரின்	வேப்பிலையின்
வாழைப்பழத்தின்	உப்பின்

வாழைக்காயின்	பாக்கின்
இஞ்சியின்	மிளகின்
சுக்கின்	கரும்பின்
காராபூந்தியின்	புளியின்
தேனின்	கிராம்பின்

தித்திப்பான இரண்டு பொருள்களின் பெயரைச் சொல்

பாடம் 20
செம்படவர்



இந்தக் குளத்தைப் பார். இது ஓர் ஆழமான குளம். இதில் தண்ணீர் நிரம்பி இருக்கிறது. இதில் பல மீன்கள் வசிக்கின்றன. குளத்தின் கரையில் அநேக மரங்கள் இருக்கின்றன.

கரை ஓரமாக ஒருவர் உட்கார்ந்து கொண்டிருக்கிறார் அல்லவா? அவர் என்ன செய்கிறார்? அவர் மீன் பிடிக்கிறார். மீன் பிடிக்கிறவர் செம்படவர். அவர் கையில் ஒரு தூண்டில் வைத்திருக்கிறார். தூண்டிலைப் போட்டு அவர் மீன் பிடிக்கிறார். சிலர் வலையை வீசி மீன் பிடிப்பதும் உண்டு.

செம்படவர் பக்கத்தில் ஒரு சிறிய கூடை இருக்கிறது அல்லவா? அவர் அந்தக்கூடையில் மீன்களைப் பிடித்துப் போடுவார்; வீட்டுக்குக் கொண்டு போவார்; மனைவியிடம் கொடுப்பார்; அவள் அதைக் கறி செய்து கணவனுக்கு இடுவாள்; தானும் உண்பாள்.

கேள்விகள்

1. குளக்கரையில் நீ என்ன பார்க்கிறாய்?
2. செம்படவர் என்ன செய்கிறார்?
3. அவர் எப்படி மீன் பிடிக்கிறார்?
4. அவர் மீன்களைப் பிடித்து என்ன செய்வார்?

அப்பியாசம் 15

கோடிட்ட இடங்களில் சரியான வார்த்தைகளை எழுது :—

1. செம்படவர்———மீன் பிடிக்கிறார்.
2. நதியின் கரையோரமாக———
3. இது மிகவும்———கிணறு
4. மேஜையின்———நாற்காலி———

வாக்கியங்களில் அமைத்து எழுது—

1. பலர்
2. சிலர்
3. கறி செய்து.
4. வசிக்கின்றன.

பாடம் 21

முரட்டு ஆடுகளும் சாந்தமான ஆடுகளும்


முதல் படத்தைக் கவனி. அதில் ஒரு கால்வாய் ஓடுகிறது. கால்வாயின் ஒரு கரையில் ஒரு கருப்பு ஆடு நிற்கிறது. மற்ருெரு கரையில் ஒரு வெள்ளை ஆடு நிற்கிறது. கால்வாயின் குறுக்கே ஒரு மரப்பாலம் இருக்கிறது. அது அகலமான பாலம் அல்ல. அது மிகவும் குறுகலான பாலம்.

இரண்டாவது படத்தில், இரண்டு ஆடுகளும் ஒரே சமயத்தில் மரப் பாலத்தில் ஏறுகின்றன. ஒன்றை நோக்கி மற்ருென்று நடக்கிறது.

மூன்ருவது படத்தில், இரண்டு ஆடுகளும் மரப்பாலத்தின் மத்தியில் சந்திக்கின்றன. பாலத்தில் ஒதுங்க இடமில்லை. இரண்டு ஆடுகளும் முரட்டு ஆடுகள்; கர்வம் கொண்டவை. வெள்ளை ஆடு, "நான் தான் முந்திப் போகவேண்டும்" என்கிறது. கறுப்பு ஆடு, "நான் தான் முந்திப்போகவேண்டும்" என்கிறது. இரண்டு ஆடுகளும் பாய்ந்து முட்டிக் கொள்ளுகின்றன.

நான்காவது படத்தில் இரண்டு ஆடுகளும் தண்ணீரில் விழுந்து தத்தளிக்கின்றன.

ஐந்தாவது படத்தில் வேறு இரண்டு ஆடுகள் பாலத்தின்மேல் ஏறி வருகின்றன. அவை சாந்த குணமுள்ளவை; வீண் சண்


1
2
3
4
5
6

டைக்குப் போகமாட்டா. அவை பாலத்தின் மத்தியில் சந்திக்கின்றன. ஒதுங்கவும் இடமில்லை; திரும்பிச் செல்லவும் முடியாது. "என்ன செய்வது?" என்று அவை யோசிக்கின்றன.

ஆருவது படத்தில், ஓர் ஆடு பாலத்தில், தான் நின்ற இடத்திலேயே படுத்துக் கொள்ளுகிறது. மற்ற ஆடு மெதுவாக அதைத் தாண்டிப் போகிறது. பிறகு படுத்த ஆடு எழுந்திருந்து அக்கரையில் போய்ச் சேருகிறது.

இந்த இரண்டு ஆடுகளும் வீண் சண்டை போடவில்லை; ஆகையால், கஷ்டப்படவில்லை. வீண் சண்டை போட்டால் துன்பம் நேரிடும்.

கேள்விகள்

1. முதல் படத்தில் எத்தனை ஆடுகள் இருக்கின்றன?
2. ஓர் ஆடு என்ன நிறம்? மற்ருேர் ஆடு என்ன நிறம்?
3. அவை எங்கே இருக்கின்றன? அவை, எவ்விதக் குணமுள்ள ஆடுகள்?
4. இரண்டாவது படத்தில் ஆடுகள் என்ன செய்கின்றன?
5. மூன்ருவது படத்தில் ஆடுகள் என்ன செய்கின்றன?
6. நான்காவது படத்தில் நீ என்ன பார்க்கிருய்?
7. ஐந்தாவது படத்தில் ஆடுகள் சண்டை போடுகின்றனவா? அவை எவ்விதக் குணமுள்ள ஆடுகள்?
8. ஆருவது படத்தில் ஆடுகள் என்ன செய்கின்றன?

அப்பியாசம் 16

கோடிட்ட இடங்களில் சரியான வார்த்தைகளை எழுது :—

ஒரு வாய்க்காலின்——கரையில் ஒரு கறுப்பு—— இருந்தது.———கரையில் ஒரு———ஆடு——— ஒரே——அங்குள்ள மரப்பாலத்தில்———ஒன்றை நோக்கி———நடந்து போயின. அவை பாலத்தின்———சந்தித்தன. இரண்டு ஆடுகளும்—— ஆடுகள். பாலத்தில் ஒதுங்க இடமில்லை. ——— தத்தளித்தன.

பிறகு இரண்டு சாந்தமுள்ள—————ஏறி வந்தன, அவற்றுள்———படுத்துக் கொண்டது. மற்ற——அதைத்——சென்றது.

அப்பியாசம் 17

முன்னுல் மேலே வெளியே நடுவில் பக்கத்தில்
பின்னுல் கீழே உள்ளே வழியாக ஓரமாக

1. கூஜாவின்——பால் இருக்கிறது.
2. என்ஜின் ரயில் வண்டியில்——இருக்கிறது.
3. சாலையின்—-மரங்கள் வளர்ந்திருக்கின்றன.
4. அவன் ஏணியின்——ஏறுகிருன்.
5. கிணற்றின்——மரங்கள் இருக்கக்கூடாது.

6. தோட்டத்தின் —— பங்களா இருக்கிறது.
7. ஜன்னலின் —— காற்று வீசுகிறது.
8. மரத்திலிருந்து —— இறங்குகிறுன்.
9. என்ஜினுக்கு ரயில் வண்டிகள் —— இருக்கின்றன.
10. வகுப்பிலிருந்து——போ.

பாடம் 22

ஒரு மானின் கதை

ஒரு காட்டில் ஒரு மான் வசித்து வந்தது. ஒரு நாள் சில வேடர்கள் அந்த காட்டிற்கு வேட்டையாடப் போனுர்கள். அவர்கள் மானைக் கண்டார்கள். அதை உயிருடன் பிடிக்க நினைத்தார்கள். அது நிற்குமிடத்தை நோக்கி நடந்தார்கள்.


மான் வேடர்களைப் பார்த்த உடனே, ஓட ஆரம்பித்தது. வேடர்களும் அதன் பின்ஞல் ஓடினுர்கள். மான் மிகவும் வேகமாக ஓடிற்று; வேடர்களும் நிற்காமல் ஓடினுர்கள்.

ஓர் இடத்தில் செடிகளும் கொடிகளும் நெருங்கி வளர்ந்திருந்தன. மான் அந்தச் செடி கொடிகளுக்கு மத்தியில் ஒளிந்து கொண்டது. வேடர்கள் மானை அங்குமிங்கும் தேடிக் கொண்டிருந்தார்கள்.

மான் ஒளிந்து கொண்டிருந்த இடத்தில் கொஞ்சநேரம் சும்மா இருந்தது. பிறகு,

அங்குள்ள செடி, கொடிகளின் இலைகளைத் தின்ன அது ஆசைப்பட்டது; இலைகளை வாயில் கௌவி இழுத்தது. செடி, கொடிகள் ஆடின. இலைகள் அசைந்தன.

வேடர்கள் செடி, கொடிகள் அசைவதைக் கண்டார்கள். அங்கே மான் ஒளிந்திருக்கும் என்று நினைத்தார்கள். அவ்விடத்திற்கு மெதுவாகப் போனார்கள். மானைப் பிடித்துக்கொண்டார்கள். மானால் ஓட முடியாமல் விழித்தது.



மான் ஒளிந்துகொண்டு சும்மா இருக்கவில்லை. அது தன்னை மறைத்த செடி, கொடிகளின் இலைகளைத் தின்ன ஆசைப்பட்டது. ஆகையால் வேடர்களிடம் அகப்பட்டது.

கேள்விகள்

1. வேடர்களைக் கண்டதும் மான் என்ன செய்தது ?
2. மான் எங்கே ஒளிந்தது ?
3. மான் ஒளிந்திருந்த இடத்தை வேடர்கள் எப்படிக் கண்டு பிடித்தார்கள் ?

கோடிட்ட இடங்களில் சரியான வார்த்தைகளை வைத்து எழுது :—

1. வேடர்கள் காட்டிற்கு——போனார்கள்.
2. வேடர்கள் மானுக்கு——ஓடினார்கள்.
3. மான்——தின்ன——

அப்பியாசம் 18

கோடிட்ட இடங்களில் சரியான வார்த்தைகளை வைத்து எழுது :—

1. மான்———வசித்து வந்தது.
2. ——மானைக் கண்டார்கள்.
3. மான்——வேகமாக ஓடியது.
4. மான் கொடிகளுக்கு—ஒளிந்து கொண்டது.
5. அது——த் தின்ன——,
6. வேடர்கள் மானைப்——.
7. மான்——முடியாமல் விழித்தது.
8. ——வேடர்களிடம் அகப்பட்டது.
9. இலைகளை வாயில் ——இழுத்தது.

பாடம் 23

கடைக்குப் போதல்

குப்பன்: சுப்பா, நீ, எங்கே போகிருய்?

சுப்பன்: நான் கடைக்குப் போகிறேன்; நீயும் என்னுடன் வருகிருயா?

குப்பன்: வருகிறேன், நீ கடையில் என்ன வாங்கப் போகிருய்?

சுப்பன்: தின்பண்டம் வாங்கப் போகிறேன்.

குப்பன்: என்ன தின்பண்டம் வாங்கப் போகிருய்?

சுப்பன்: காராபூந்தி வாங்கப் போகிறேன்.


குப்பன்: சுப்பா, காராபூந்தி காரமாய் இருக்கும். லட்டு வாங்கு, அது தித்திப்பாய் இருக்கும். ஆனுல் உன்னிடம் எவ்வளவு பணம் இருக்கிறது?

சுப்பன்: என்னிடம் இரண்டு அணு இருக்கிறது.

குப்பன்: உனக்கு இரண்டு அணு எப்படிக் கிடைத்தது?

சுப்பன்: இன்று என் மாமா ஊரிலிருந்து வந்திருக்கிருர். அவர், 'தின்பண்டம் வாங்கிக் கொள்' என்று சொல்லி எனக்கு இரண்டு அணு கொடுத்தார்.

குப்பன்: அப்படியானுல் சரி, இரண்டு அணுவுக்கு இரண்டு லட்டுகள் வாங்கலாம் வா போவோம்.



சுப்பன் : (கடைக்காரரை நோக்கி) ஐயா, கடையில் என்னென்ன தின்பண்டங்கள் இருக்கின்றன ?

கடைக்காரர் : ஓமப்பொடி, காராபூந்தி, நெய்க்கடலை, காராசேவு, லட்டு, ஜிலேபி, மைசூர் பாகு எல்லாம் இருக்கின்றன.

சுப்பன் : ஒரு லட்டு என்ன விலை ?

கடைக்காரர் : லட்டு ஒன்று ஓர் அணா.

சுப்பன் : இரண்டு லட்டு கொடுங்கள்.

கடைக்காரர் : இந்தா, இரண்டு லட்டு, இரண்டு அணா கொடு.

[சுப்பன் இரண்டு அணு கொடுத்து இரண்டு லட்டு வாங்கிக் கொள்கிறன்]

சுப்பன்: குப்பா, இந்தா, உனக்கு ஒரு லட்டு; எனக்கு ஒரு லட்டு, வா வீட்டுக்குப் போவோம்.

[இருவரும் லட்டைத் தின்றுகொண்டே வீட்டுக்குத் திரும்புகிறுர்கள்.]

கேள்விகள்

1. சுப்பனும் குப்பனும் எங்கே போனுர்கள் ?
2. பணம் கொண்டு வந்தது யார் ?
3. அவனுக்குப் பணம் கொடுத்தது யார் ?
4. எவ்வளவு பணம் கொடுத்தார் ?
5. சுப்பன் கடையில் என்ன தின்பண்டம் வாங்கினுன் ? அதை என்ன செய்தான் ?

அப்பியாசம் 19

எந்தக் கடையில் கீழ்க்கண்ட சாமான்கள் கிடைக்கும் ?


சாமான்கள்

1.	புத்தகம்	6.	பித்தளைக் குடம்
2.	ரோஜாப்பூ	7.	பூசனிக்காய்
3.	பட்டு	8.	பலகை
4.	ஓமப்பொடி	9.	கம்பி
5.	காப்பிக்கொட்டை	10.	பாய்

கடைகள்

பக்ஷணக்கடை	ஜவுளிக்கடை
பாத்திரக்கடை	பலசரக்குகடை
மரக்கடை	புத்தகக்கடை
பூக்கடை	இரும்புக்கடை
பாய்க்கடை	காய்கறிக்கடை

மாதிரி:— பக்ஷணக் கடையில் ஓமப்பொடி கிடைக்கும். பாத்திரக் கடையில்———கிடைக்கும்.



பாடம் 24

பால்

இந்தப் படத்தைப் பார், பால்காரர் என்ன செய்கிருர்.

பால்காரர் பாலேக் கறக்கிருர். அவர் பசுவின் பின்னங்கால்களே ஒரு கயிற்ருல் கட்டியிருக்கிருர். ஏன் தெரியுமா? பசு உதைக்காமல் இருப்பதற்காக அதன் பின்னங்கால்களே அவர் பிணேத்திருக்கிருர். முன்னங்கால்களின் பக்கத்தில் கன்று நிற்கிறது. பசு தன் கன்றை அடிக்கடி நாக்கினுல் நக்குகிறது.

பால்காரர் பாலேக் கறந்து சிறிது தூரத்திலுள்ள பாத்திரங்களில் ஊற்றுவார். வீட்

டின் வாசலில் ஒரு பெண், பால் வாங்க நிற்கிருள். அவள் கையில் ஒரு செம்பு வைத்திருக்கிருள். அஃது ஒரு வெள்ளிச் செம்பு. பால்காரர் கறந்த பாலே அளந்து, செம்பில் ஊற்றுவார். அவர், காலேயிலும் மாலேயிலும் பசுவினிடமிருந்து பாலேக் கறந்து கொடுப்பார்.

பால் இனிப்பாய் இருக்கும்; உடம்புக்குப் பலம் தரும். பாலிலிருந்துதான் தயிர், மோர், வெண்ணெய், நெய் இவைகள் கிடைக்கின்றன. எப்படித் தெரியுமா? பாலேக் காய்ச்சி ஆற வைப்பார்கள். ஆறின பிறகு அதில் சிறிதளவு மோரை ஊற்றுவார்கள். இதை 'உறை குத்துதல்' என்று சொல்லுவார்கள். பாலேக் காய்ச்சி ஆற வைத்து உறை குத்திஞல் தயிர் ஆகும். தயிரைக் கடைந்தால் மோர் ஆகும். மோரிலிருந்து வெண்ணெயைத் திரட்டி எடுப்பார்கள். வெண்ணெயைக் காய்ச்சிஞல் நெய் ஆகும்.

கேள்விகள்

1. பால்காரர் பசுவின் பின்னங்கால்களே ஏன் கட்டுகிருர்?
2. பால்காரர் எப்போது பால் கறப்பார்?
3. பாலிலிருந்து என்னென்ன கிடைக்கின்றன?

அப்பியாசம் 20

1. கோடிட்ட இடத்தில் சரியான வார்த்தையை வைத்து எழுது :—

எண்ணெய் ——— கடைக்குப் போனேன். (வாங்க, விற்க) கடைக்காரர் எண்ணெயை——— ஜாடியில் ஊற்றினர். (கறந்து, காய்ச்சி, அளந்து)

2. வாக்கியங்களில் அமைத்து எழுது :— (காலையில், மாலையில், அடிக்கடி, கொஞ்சம்)


பாடம் 25

தாய் எலியின் சொல்லைக் கேளாத குட்டி எலி

ஒரு வீட்டில் ஒரு பாட்டி இருந்தாள். அந்த வீடு மிகவும் சிறியது. அதில் ஒரு சிறிய அறை உண்டு. அதில் ஜன்னலே இல்லை. ஆகையால் அந்த அறை மிகவும் இருட்டா யிருக்கும். பாட்டி அந்த அறையில் சமைய லுக்கு வேண்டிய சாமான்களை எல்லாம் வைத் திருந்தாள். அந்த அறையில் பல எலிகள் வளைகள் தோண்டி வசித்தன. அவை பாட்டி வைத்திருந்த சமையல் பொருள்களைத் திருடித் தின்று வந்தன.

எலிகளைத் தொலைக்கப் பாட்டி நினைத் தாள்; ஒரு எலிப்பொறி வாங்கினுள்; அதில் ஒரு முருக்கைக் கட்டினுள்; இரவில் அந்தப் பொறியை வளையின் அருகில் வைத்தாள்.

கொஞ்சநேரம் சென்றது. வளையிலிருந்து ஓர் எலியும் அதன் குட்டியும் இரை தேட வெளியே வந்தன. குட்டி எலி பொறியிலுள்ள முறுக்கைப் பார்த்து, 'அம்மா, இந்தச் சிறிய அறையைப் பார். இதில் தின்பண்டம் இருக்கிறது. அதை நான் தின்னப் போகிறேன் என்றது.




தாய் எலி குட்டியை நோக்கி, 'குழந்தாய், அஃது அறை அன்று. அது நம்மைப் பிடிக்க வைத்திருக்கும் யந்திரம். நீ அதற்குள் போனால் உனக்கு ஆபத்து வரும்' என்று சொல்லிற்று.

பிறகு தாய் எலியும் குட்டி எலியும் அங்குமிங்கும் ஓடின; அரிசி, பருப்பு இவைகளைத் தின்றன. பிறகு வளைக்குள் போய் படுத்துக் கொண்டன.

சிறிது நேரத்தில் தாய் எலி தூங்கி விட்டது. குட்டி எலிக்குத் தூக்கம் வரவில்லை. அதற்கு முறுக்கைத் தின்னவேண்டும் என்ற

ஆசை அதிகப்பட்டுக் கொண்டே இருந்தது. அது மெதுவாக எழுந்தது. வளைக்கு வெளியே வந்தது. எலிப் பொறியின் சமீபத்தில் சென்றது. அதனுள்போய் முறுக்கைக் கௌவி இழுத்தது. பொறியின் கதவு 'டபார்' என்று மூடிக்கொண்டது.



எலிக்குட்டிக்கு வெளியேவர முடியவில்லை. அது பொறிக்குள் சுற்றிச் சுற்றி வந்தது.

பாட்டி எழுந்து வந்தாள்; பொறியை வீட்டிற்கு வெளியே கொண்டுபோனாள். அதைத் திறந்து, எலிக்குட்டியை அடித்துக் கொன்றாள்.

கேள்விகள்

1. எலிகளைத் தொலைக்க நினைத்துப் பாட்டி என்ன செய்தாள்?
2. எலிப்பொறியைப் பார்த்த குட்டி எலி தாய் எலியிடம் என்ன சொல்லிற்று?
3. அதற்குத் தாய் எலி என்ன பதில் சொல்லிற்று?
4. தாய் எலி தூங்கியவுடன் குட்டி எலி என்ன செய்தது?

5. குட்டி எலி எப்படி இறந்தது ?
6. இக்கதையால் நீ அறிவது என்ன ?

அப்பியாசம் 21

கோடிட்ட இடத்தில் சரியான வார்த்தையை வைத்து எழுது :

1. குதிரைக்குக் கொம்புகள் ———(உண்டு, கிடையாது)
2. பாட்டி எலிகளை ——— நினைத்தாள். (வளர்க்க, கடிக்க, தொலைக்க)
3. பம்பரம் ——— ஆடுகிறது. (அங்குமிங்கும், சுற்றிச்சுற்றி).

வாக்கியங்களில் அமைத்து எழுதுக :—

அருகில், நோக்கி, மெதுவாக, திறந்து, புகுந்தால்.

பாடம் 26

திருடர்களைத் துரத்தியப் பிராணிகள்.

புதூர் என்பது ஒரு சிறிய ஊர். அந்த ஊரில் ஒரு வண்ணார் இருந்தார். அவர் ஒரு கழுதையை வளர்த்தார். அவர் அதற்கு நிறையத் தீனிபோட்டு அதைக் காப்பாற்றி வந்தார். தவிர, அவர் ஒரு நாய், பசு, பூனை, சேவல் இவைகளையும் பிரியமாக வளர்த்து வந்தார். அந்தப் பிராணிகளும் அவரிடம் பிரியமாய் இருந்தன.

கழுதை, அவருக்காகத் துணி மூட்டைகளைச் சுமந்தது. நாய் அவருடைய வீட்டைக் காத்தது. பசு பால் கொடுத்தது. பூனை, எலிகள் வந்து துணிகளைக் கடிக்காமல் பார்த்துக் கொண்டது. சேவல் தினந்தோறும் அதிகாலையில் எழுந்து, கூவி அவரை எழுப்பி வந்தது.

ஒரு சமயம் இந்த வண்ணார் தம் மனைவி, மக்களுடன் சமீபத்திலுள்ள மற்றோர் ஊருக்குப் போயிருந்தார். இரண்டு திருடர்கள் அவர் வீட்டிற்குள் போய், அவருடைய பொருள்களைத் திருடிக்கொண்டு போனார்கள்.


திருடர்கள் சென்ற கொஞ்ச நேரத்திற்குள் வண்ணார் வீடு வந்து சேர்ந்தார். வீட்டைத் திறந்து உள்ளே சென்றார். 'ஐயோ என் வீட்டுச் சாமான்கள் எல்லாம் திருட்டுப் போயினவே, என்ன செய்வேன்?' என்று சொல்லி அழுதார்.

கழுதை 'வாள், வாள்' என்று கத்திற்று. நாய் 'ளொள், ளொள்' என்று குறைத்தது. சேவல் 'கொக்கொரக்கோ' என்று கூவிற்று. பசு 'அம்மா அம்மா' என்று கூப்பிட்டது. பூனை 'மியா மியா' என்று கத்திற்று. அவை இரைக்காகக் கத்துகின்றன என்று வண்ணார் நினைத்தார். அவைகளை வெளியே செல்ல விட்டார்.

அவை திருடர்கள் போன இடத்தை நோக்கி ஓடின. கொஞ்ச தூரம் போனதும்

அவைகள் ஒரு மரத்தினடியில் கள்வர் இருவர் உட்கார்ந்திருப்பதைக் கண்டன. கள்வர்கள் தாங்கள் திருடிக்கொண்டுவந்த பொருள் களைப் பங்கு போட்டுககொண்டிருந்தார்கள்.

பசு அவர்களை முட்டியது. நாய் கடித்தது. கழுதை 'விலுக் விலுக' என்று உதைத்தது. பூனை நகங்களால் பிருண்டியது. திருடர் களுக்கு வலி பொறுக்க முடியவில்லை. அவர் கள் ஓடியே போய் விட்டார்கள். திரும்பிப் பார்க்கவேயில்லை. இன்னும் அவர்கள் போன இடம் தெரியவில்லை.



திருடர்கள் ஓடின பிறகு அந்தப் பிராணி கள் உரக்கக் கத்தின. வண்ணார் ஓடி வந்தார்.

மரத்தினடியில் அவைகள் திருட்டுப்போன பொருள்களைச் சுற்றி நிற்பதைப் பார்த்தார். அவர் பொருள்களை எடுத்துக்கொண்டு வீட்டிற்குத் திரும்பினார். அவர் அடைந்த சந்தோஷத்துக்கு அளவே இல்லை.


கேள்விகள்

1. வண்ணார் என்னென்ன பிராணிகளை வளர்த்தார்?
2. வண்ணார் ஊரில் இல்லாத சமயத்தில் திருடர்கள் என்ன செய்தார்கள்?
3. வண்ணார் திரும்பி வந்தவுடன் பிராணிகள் என்ன செய்தன?
4. வண்ணாருக்குத் திருட்டுப்போன பொருள்கள் எப்படிக் கிடைத்தன?

அப்பியாசம் 22

பிரியமாக, ஏராளமாக, நிறைய, திறந்து, உரக்க இந்த வார்த்தைகளில் சரியான வார்த்தைகளைப் பொறுக்கி எடுத்துக் கீழே கொடுத்துள்ள ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுது:—

1. மாமரத்தில் காய்கள்——இருக்கின்றன.
2. கிண்ணத்தில்——இருக்கிறது.
3. பெட்டி——இருக்கிறது.
4. ராமன்——க் கூவினான்.
5. தாயார் குழந்தையைப்——வளர்க்கிறாள்.



பாடம் 27

உலாவப் போனேன்.

கிட்டு: மணி! நேற்றுச் சாயங்காலம் உன்னை வீட்டில் காணுமே! எங்கே போனுய்?

மணி: கிட்டு, நான் நேற்றுச் சாயங்காலம் என் தகப்பனருடன் உலாவப்போனேன்.

கிட்டு: எங்கே உலாவப் போனீர்கள்?

மணி: நதிக்கரை ஓரமாக உலாவச் சென்ருேம்.

கிட்டு: நீ அங்கே என்ன பார்த்தாய்?

மணி: மணலில் சில சிறுவர்கள் ஓடி ஆடிக் கொண்டிருந்தார்கள். மற்றும் சில சிறுவர்கள் கோழிக் கூடு கட்டி விளை

யாடிக் கொண்டிருந்தார்கள். பெரியோர்கள் தங்கள் தங்கள் நண்பர்களுடன் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். நதியில் பலர் ஸ்நானம் செய்து கொண்டிருந்தார்கள்.

கிட்டு: நீ, மணலில் விளையாடினுயா?


மணி: இல்லை. என் தகப்பஞர் கொஞ்ச தூரம் நடந்து போகவேண்டும் என்று சொல்லி என்னையும் கூட்டிச் சென்ருர்.

கிட்டு: வேறு எங்கே போனீர்கள்?

மணி: நதியின் கரையோரமாக நடந்து சென்ரேம். கொஞ்ச தூரம் சென்றதும், ஆற்றின் குறுக்கே போட்டுள்ள பாலத்தைக் கண்டோம்.

கிட்டு: அது பெரிய பாலமா? சிறிய பாலமா?


மணி: அது பெரிய பாலம். அதன் மீது பல



வண்டிகளும் போய்க் கொண்டிருந்தன. அநேக மனிதர்களும் நடந்து சென்று கொண்டிருந்தனர். அந்தப் பாலம் மிகவும் பலமான பாலமாம்! அதன்மீது பல யானைகள் தொடர்ந்து போஞலும் அது இடிந்து விழாதாம். இப்படி என் தகப்பஞர் சொன்ஞர்.

கிட்டு: நீங்கள் பாலத்தின்மீது ஏறினீர்களா?

மணி : இல்லை. பாலத்தின் அருகே ஒரு கோவிலைக் கண்டோம். அது ஒரு சிறிய கோவில். ஆனாலும், அதன் கோபுரம் மிகவும் அழகாய் இருந்தது. கோவில் மணி ஓசையைக் கேட்டோம்.



பலர் கோவிலுக்குள் போய்க் கொண்டும் கோவிலிருந்து வெளியே வந்து கொண்டும் இருந்தார்கள். நாங்களும் கோவிலுக்குப் போனோம்.

கிட்டு : கோவிலுக்குப் போய் என்ன செய்தீர்கள் ?

மணி : கோவிலுக்குப் போய் சுவாமியை வணங்கினோம்; பிறகு வீட்டுக்குத் திரும்பினோம்.

கிட்டு : மணி! நீ நேற்றுத் தமாஷாய் ஒரு சுற்றுச் சுற்றிவிட்டு வந்துவிட்டாய்! நான் தான் நேற்று எங்கும் போகவுமில்லை; விளையாடவுமில்லை.

மணி : சரி, வா. நாம் இருவரும் இன்று விளையாடுவோம்.

கேள்விகள்

1. மணி யாருடன் உலாவப் போனான் ?
2. மணி எங்கே உலாவப் போனான் ?
3. மணி நதிக்கரை ஓரமாக என்ன பார்த்தான்?
4. மணி கோவிலுக்குப் போய் என்ன செய்தான் ?

அப்பியாசம் 23

தைரியமுள்ள சிறுவன்



படங்களைப் பார்த்துக் கதை அமைத்தல்

படத்தைப் பார்த்துக் கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் சொல்லு,

படம் 1. பெண் எங்கேயிருந்து எங்கே போகிருள் ?

படம் 2. நாய் யாரை நோக்கி ஓடி வருகிறது? ஏன் வருகிறது?

படம் 3. அந்தப் பெண் என்ன செய்கிருள் ?

படம் 4. பையன் என்ன செய்கிருன்? அவன் ஏன் ஓடி வருகிருன்? அவன் கையில் என்ன இருக்கிறது ?

படம் 5. பையன் எங்கே நிற்கிருன்? என்ன செய்கிருன்? நாய் என்ன செய்கிறது ?

படம் 6. மனிதர்கள் என்ன செய்கிருர்கள் ?

கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் எழுது :—

1. பெண் எங்கிருந்து எங்கே போய்க் கொண்டிருந்தாள் ?
2. நாய் அவளை நோக்கி ஏன் ஓடி வந்தது ?
3. நாய் ஓடி வந்ததைக் கண்டு பெண் என்ன செய்தாள்?
4. பையன் பெண்ணை எவ்விதம் காப்பாற்றினன்?
5. நாயை யார் விரட்டினர்கள் ?

பாடம் 28

ஆத்திசூடி.

1. அறஞ்செய விரும்பு.
2. ஆறுவது சினம்.
3. இயல்வது கரவேல்.
4. ஈவது விலக்கேல்.
5. ஊக்கமது கைவிடேல்.
6. எண் எழுத்து இகழேல்.
7. ஏற்பது இகழ்ச்சி.
8. ஐயம் இட்டு உண்.
9. ஒப்புரவு ஒழுகு.
10. ஓதுவது ஒழியேல்.
11. சனி நீராடு.
12. தந்தை தாய்ப் பேண்.
13. நன்றி மறவேல்.
14. பருவத்தே பயிர் செய்.
15. இளமையில் கல்.

— ஔவையார்

பாடம் 29

கொன்றை வேந்தன்

1. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
2. ஆலயம் தொழுவது சாலவும் நன்று.
3. இல்லறம் அல்லது நல்லறம் அன்று.
4. ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்.
5. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.
6. எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்.
7. கிட்டா தாயின் வெட்டென மற.
8. கீழோர் ஆயினும் தாழ உரை.
9. கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் [கல்வி.
10. சீரைத் தேடின் ஏரைத் தேடு.
11. சூதும் வாதும் வேதனை செய்யும்.
12. தந்தைசொல் மிக்க மந்திரம் இல்லை.
13. தாயில் சிறந்ததொரு கோயிலும் இல்லை.
14. பாலோ டாயினும் காலமறிந்து உண்.
15. மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்.

—ஔவையார்

பாடம் 30

வெற்றி வேற்கை

1. எழுத்தறி வித்தவன் இறைவன் ஆகும்.
2. கல்விக்கு அழகு கசடற மொழிதல்.
3. செல்வர்க்கு அழகு செழுங்கிளை தாங்குதல்.
4. மன்னவர்க்கு அழகு செங்கோல் முறைமை.
5. மந்திரிக்கு அழகு வரும்பொருள் உரைத்தல்.
6. உண்டிக்கு அழகு விருந்தோடு உண்டல்.
7. அடினும் ஆவின்பால் தன்சுவை குன்றாது.
8. சுடினும் செம்பொன் தன்னொளி கெடாது.
9. கற்கை நன்றே; கற்கை நன்றே
10. பிச்சை புகினும் கற்கை நன்றே.